Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 278 of 2014**

Deposition of P.W. 11 (L.W. 7 ) } Prosecution } Defence }

Name of the Witness : திருமதி.சுதா

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 10.11.2025.

*1*, *2* எதிரிகள் ஆஜர். *3* முதல் *7* எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேப்பமரத்தூரில் வசித்து வருகிறேன், வீட்டில் இருக்கிறேன். நான் ஒசூரில் என் அப்பா, அம்மாவுடன்

குடியிருந்தேன். சுரேஸ் வேலை செய்வதற்காக அங்கு வந்தார். நாங்கள் இருவரும் காதலித்து வந்தோம். எனக்கு 2010ல் சுரேசுடன் இரு வீட்டார் சம்மதத்துடன் திருமணமானது. எனக்கு திருமணம் ஆனதிலிருந்து ஊரில் அங்கு இருந்தேன். முதலில் அவர்களுக்கு என்னுடைய ஜாதி என்னவென்று தெரியவில்லை. 06.09.2010ம் என்னுடைய திருமண வரவேற்பு வைத்திருந்தார்கள். அதில் ஊர்காரர்கள், எங்கள் இரு குடும்பத்தை சேர்ந்தவர்கள் எல்லோரும் கலந்து கொண்டார்கள். திருமணம் ஆகி ஒரு வருடம் கழித்து ஊரில் திருவிழா நடந்தது. அப்போது தான் ஊர்காரர்களுக்கு நான் என்ன ஜாதியை சேர்ந்தவர் என்று தெரியவந்தது. ஊரில் எல்லோருக்கும் வரி போட்டார்கள். என் மாமனார் கோபாலும், மச்சினன் ரவியும் என் மாமனார் மாமியார் பெயரிலும், என் கணவர் எங்கள் பெயரில் ஊர் வரியை கொடுக்க போனார்கள். நான் ஆதி திராவிடர் இனத்தை சேர்ந்தவர் என்பதால் எங்களிடம் வரி வாங்க மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்.

2) எங்களை ஊரை விட்டு ஒதுக்கி வைப்பதாக பொம்மிடி நடூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். புகாரை பதிவு செய்தார்கள். நாங்கள் சென்னையில் எஸ்.சி.எஸ்டி ஆணையத்திடம் 22 பேர் மீது புகார் கொடுத்தோம். போலிசார் எங்களுக்கு பாதுகாப்பு கொடுத்தார்கள். பிறகு

ஆர்.டி.ஓ., தாசில்தார், டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டா் எல்லோருமு் எங்கள் வீட்டின் அருகே விசாரணைக்கு *4* மணிக்கு வந்தார்கள், தேதி எனக்கு சரியாக நியாபகமு் இல்லை, *10* வருடத்திற்கு முன்பாக இருக்கலாம். அவர்கள் விசாரணை செய்து விட்டு போய் விட்டார்கள், 5. 5.30மணிக்கு எங்கள் ஊரை சேர்ந்த ரங்கநாதன், செந்தில், சதீஸ், பூமாணிக்கம், பசுவன், சந்திரன், அழகேசன் இவர்கள் எல்லோரும் என் மாமனாரை கட்டையால் தலையிலும், வலது முழங்கை அருகே அடித்து விட்டார். கொடுவாளால் ரங்கநாதன் வலது முழங்கையில் வெட்டி விட்டார். எல்லோரும் சேர்ந்து வந்து எனு் மாமனாரை அடித்தார்கள், யாா் அடித்தார்கள் என்று தெரியாது. கல்லால் அடித்தார்கள், கூட்டமாக இருந்ததால் யார் அடித்தார்கள் என்று தெரியாது, எனு் கணவருக்கு பினு் தலையில் அடிப்பட்டது. அங்கிருந்த போலிசாா் *108* ஆம்புலன்சுக்கு போன் செய்தார்கள். என்னிடமு் காட்டப்படுமு் கட்டைகளு் 2 மற்றும் கொடுவாள் 2 தான் அன்றைய தினம் உபயோகப்படுத்தப்பட்டது. அந்த *2* கட்டைகளு் ***சா.பொ.1*** ஆகவும், *2* கொடுவாளு் **சா.பொ.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரிலிருக்கும் *1, 2* எதிரிகளை தெரியும் என்று சொல்கிறார். 3 முதல் 7 எதிரிகளை தெரியும் என்று சொல்கிறார். அவர்கள் இன்று ஆஜரிலில்லை. அவர்கள் தரப்பில்

மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எங்கள் நிலமும், எதிரிகள் நிலமும் பக்கத்து பக்கத்தில் உள்ளது. ஒரே வரப்பு. இந்த நிலம் சம்பந்தமாக தான் பிரச்சனை என்று சொல்கிறேன். எவ்வளவு நாட்களாக பிரச்சனை என்று எனக்கு தெரியாது. என் திருமணத்திற்கு முன்பிருந்தே பிரச்சனையா என்று எனக்கு தெரியாது. பணம் எங்களிடம் கேட்டு பிரச்சனை செய்தது 2010 அக்டோபர் மாதம் என்றால் சரிதான். பணம் கேட்டதிலிருந்தே 2010 அக்டோபர் மாதத்திலிருந்து எங்களுக்கும் அவர்களுக்கும் பிரச்சனை, பேச்சு வார்த்தை இல்லை என்றால், எனக்கு கலப்பு திருமணம் ஆனதிலிருந்து எங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லை. பணம் கொடுக்காததால் தான் எதிரிகள் தரப்பில் எங்கள் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் பணம் கேட்டதால் தான் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்பாகவே கேஸ் கொடுத்து விட்டேன். நான் எதிரிகள் 22 பேர் மீது ஜாதி பெயரை சொல்லி திட்டியதால் தான் புகார் கொடுத்த பிறகு தான் நான் என்ன ஜாதி என்று ஊர்காரர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். பின்பு சாட்சி பணத்திற்கும், நாங்கள் கொடுத்த கேசுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறார்.

2) எங்களுக்கு கடன் பிரச்சனையும், நில பிரச்சனை இருந்ததால் தான் எதிரிகள் 22 பேர் மீது ஜாதி பெயரை சொல்லி திட்டியதால் தான் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. 5.30மணிக்கு பிரச்சனை நடந்த போது நான் வீட்டிற்கு வெளியே தான் இருந்தேன். எதிரிகள் அடித்ததாக சொல்வது நீர்தேக்க தொட்டி அருகே நடந்தது என்றால் சரியல்ல. யசோதாவின் கடை அருகே நடந்தது. யசோதா கடைக்கும், என் வீட்டிற்கும் 200 மீட்டர் தூரம் இருக்குமா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. எந்த கட்டையால், எந்த கொடுவாளால் தாக்கினார்கள் என்று என்னால் சொல்ல முடியாது. ரங்கநாதன் என் மாமனாரை தலையில் அடித்தார். சதீஸ் கொடுவாளால் வலது கையில் வெட்ட வந்தார். யார், யாரை தாக்கினார் என்று முதல் விசாரணையில் தெரியாது என்று சொல்லிவிட்டு தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்ப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. கடன், நிலம் பிரச்சனையிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இதே சம்பவம் தொடர்பாக போலிசார் எங்கள் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

3) எங்களுக்கு காவலுக்கு போலிசார் இரண்டு பேர் இருந்தார்கள். போலிசாரை நாங்கள் தாக்கியதாக எங்கள் மீது பாப்பிரெட்டிப்பட்டி

நீதிமன்றத்தில் குற்ற வழக்கு நடைபெற்று முடிந்து விட்டது என்றால் சரிதான். எங்கள் குடும்பம் தான் போலிசாரையும் அடித்து, எதிரிகளையும் தாக்கிவிட்டதால் மேற்சொன்ன வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.